**தலைப்பு 329 – தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 யூன் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் விடுக்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கட்டுநிதி சீராக்க கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிப்பதற்குரிய அரச கணக்குகள் திணைக்களத்தின் வழகாட்டல்களின் பிரகாரம் கட்டுநிதி சீராக்கக் கணக்கு தயாரிக்கும் போது சீராக்கம் செய்யபடக் கூடாத போதும் ரூபா 203,600 பெறுமதி கட்டுநிதி சீராக்கக் கணக்கிற்கு சீராக்கப்பட்டிருந்தது. | ரூபா 203,660 சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் திணைக்கள பதிவேட்டின் பிரகாரம் அம்மீதி தீர்வு செய்யப்பட்டுள்ளது. திரட்டிய பரீட்சை மீதியில் அச்சிடப்பட்ட பிரதியை பெற்றுக்கொள்ளும் போது தீர்வு செய்யப்படாத மீதியொன்று காணப்பட்டதாக அவதானிக்கப்பட்ட போதும் 2021 ஆம் ஆண்டிற்காக நடாத்திச் செல்லப்படும் Cigas நிகழ்ச்சித் திட்டத்தில் அவ்வாறான ஆரம்ப மீதியொன்று அவதானிக்கப்படவில்லை. ஆதலால் அதனை சரியான அல்லாத Cigas | கணக்குகள் தயாரிக்கும் போது வழிகாட்டல் பின்பற்றப்படும் தேவைப்பாடு |

| | | |
|---|---|---|
| | கணனி நிகழ்ச்சித்திட்டத்தில் இருந்து எடுக்கப்பட்ட அச்சிடப்பட்ட பிரதி காரணமாக இடம்பெற்ற தவறொன்றாக இருந்ததுடன் இதன் பிறகு சரியாக செயற்படுவதற்கு குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது.<br>ரூபா 203,660/- தொகை கட்டுநிதி கணக்கிற்கு சீராக்கம் செய்யக் கூடாதென அரச கணக்குகள் திணைக்களத்துடன் தொலைபேசி மூலமம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது அறிவிக்கப்பட்டது. அவ்வாறே கட்டுநிதி கட்டுநிதி சீராக்கக் கணக்கிற்கு உட்படுத்த வேண்டிய அனைத்து உருப்படிகளும் 20/2020 வழிகாட்டல் கோவையில் உள்ளடக்கப்படவில்லை எனவும் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.<br>. | |

### 1.6.2 நிதியல்லாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி பதிவேட்டின் பிரகாரம் கற்பனைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள கணனி மென்பொருட்களின் ஆரம்ப மீதி ரூபா 879,281 ஆக இருந்த போதும் அந்நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ரூபா 1,479,281 எனக் காண்பிக்கப்பட்ட கற்பனைச் சொத்துக்கள் ரூபா 600,000 கூடுததலாகக் காட்டப்பட்டிருந்தது. | கணனி மென்பொருட்கள் அரச கணக்குகள் திணைக்களத்தினால் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் மீதி ரூபா 600,000 குறைத்து 2020 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்க வேண்டும். திறைசேரிப் புத்தகங்கள் மற்றம் திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் கணக்கு ஒப்பிடப்பட்டு சரியான பெறுமதி பேணிச்செல்லல் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| | அவ்வேறுபாடு 2021 மார்ச் மாதம் சரி செய்யப்பட்டிருந்தது. | வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு கணக்கிணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்கள புத்தகத்தின் பிரகாரம் வருமானம் அல்லாத பெறுவனவு ரூபா 1,953,919 ஆக இருந்த போதும் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,838,211 எனக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் தேறிய காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 115,708 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ரூபா 115,708.00 தொகை பிழையாக இரண்டு முறை பதிவு செய்யப்பட்டதால் காசுப் பாய்ச்சல் கூற்றில் குறைத்துக் காண்பிக்கப்பட்டது. அண்ணளவான அடிப்படை என வழிகாட்டி கோவையில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் காசு அடிப்படையில் காசுப் பாய்ச்சல் தயாரித்தமை சிக்கலான ஒன்றல்ல என அரச கணக்குகள் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டது. | சரியான கணக்கீட்டு நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் முற்பண பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் முறையே ரூபா 2,305,173 மற்றும் ரூபா 2,375,764 எனக் காண்பிக்கப்பட்டிருந்த துடன் காசுப் பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 3,275,317 மற்றும் ரூபா 2,583,363 எனக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 762,545 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்திடம் உள்ள அறிக்கைகளின் பிரகாரம் முற்பண "பீ" கணக்கில் கடன் அறவீடு மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் கடன் அறவீடு என்பவற்றிற்கு இடையே வேறுபாடு அவதானிக்கப்படாததுடன் முற்பணக் கொடுப்பனவின் போது திணைக்களத்திற்கு வருகை தந்த உத்தியோகத்தரொருவரிடமிருந்து கடன் மீதி மாற்றல் ரூபா 210,099 மேற்கொள்ளாமை மற்றும் ரூபா 2,500 கூடுதலாக கடன் தவறு அறவீடு ஒன்று இடம்பெற்றுள்ளது. அதனை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முற்பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவு களுக்குரிய காசுப் பாய்ச்சல் கணக்கீட்டு முறைப்படுத்தப்பட வேண்டும். |

**1.6.4 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் மற்றும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளில் ரூபா 164,126 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இவ்வேறுபாடு தற்போது சீராக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான விடுபாடுகள் இடம் பெறாமல் இருப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | முற்பண ‘‘பீ’’ கணக்குகளில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 கட்டுநிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- |
| திணைக்களம் 2020 ஆம் ஆண்டில் ரூபா 763 மில்லியன் கட்டுநிதி கோரியிருந்ததுடன் பொது திறைசேரியால் திணைக்களத்திற்கு ரூபா 406 மில்லியன் கட்டுநிதி மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.அதன் பிரகாரம் கோரப்பட்ட தொகையில் 53 சதவீதம் மாத்திரம் பொது திறைசேரியால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது | 2020 ஆம் ஆண்டில் இடைக்கால பாதீடு ஒன்றாக இருந்ததுடன் அதன் முதலாவது வரவு செலவுத் திட்டம் சனவரி, பெப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு உரித்தாக இருந்து. அதற்கு கட்டுநிதி கோரல் திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் நாட்டில் காணப்பட்ட Covid – 19 தொற்று நிலைமை காரணமாக பின்னைய மாதங்களுக்காக உரிய கட்டுநிதி கோரலுக்கு திட்டங்களை தயாரிக்க முடியவில்லை. வரவு செலவுத் திட்ட ஏற்பாட்டின் பேரில் **Free Balance** සහ மற்றும் **Enable** நிறுவனங்களின் (**ITMIS** நிகழ்ச்சிக்காக) காலாண்டு கொடுப்பனவிற்காக நிதிஏற்பாடு கோரப்பட்ட போதும் **Enable** நிறுவனத்தின் பட்டியல் பெறுமதி குறைவாக இருந்தமையால் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை குறைவடைந்தமை மற்றும் **ITMIS** கணனி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தொகை குறைவடைந்த காரணத்தினால் திறைசேரியிலிருந்து இக்கட்டுநிதி வழங்கல் குறைவடைந்தமை இந்நிலைக்கு காரணமாகும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டில் 02 மீண்டு வரும் செலவின விடயங்களுக்கு ரூபா 2,250,000 ஆன நிதி ஏற்பாடு நி.பி 66 இன் கீழ் 6 சதவீதம் முதல் 46 சதவீதம் வரை குறைத்தும் 03 செலவின விடயங்களுக்குரிய மொத்தம் ரூபா 820,000 தொகையான நிதிஏற்பாடு 19 சதவீதம் முதல் 59 சதவீதம் வரை அதிகரிப்பொன்றும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். | வருடாந்த மதிப்பீட்டினை நடைமுறைச் சாத்தியமாகவும் வினைத்திறனாகவும் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு |
| (ஆ) 02 மூலதனச செலவின விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டில் நி.பி 66 இன் கீழ் 100 சதவீதமான குறைத்தலும் 217 சதவீத அதிகரிப்பும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | **Covid - 19** தொற்றுநோய் சூழ்நிலையின் காரணமாக 329-1-1-2401 மூலதனச் செலவுப் விடயத்தின் கீழ் பதவியணியினர் பயிற்சித் நடவடிக்கைகள் Outbound Training Programme) இற்காக மதிப்பிடப்பட்ட செலவினம் 2020 ஆம் ஆண்டில் ஏற்படவில்லை. நிதி அமைச்சின் செயலாளரின் அலுவலகத்திற்கு கடமை தேவைக்காக மடிக் கணனி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையில் முகங் கொடுப்பதற்காக உத்தியோகத்தர்களின் நலன்புரி தொடர்பான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் 329-1-1-2103 செலவின விடயத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட நிதி | வருடாந்த மதிப்பீட்டினை நடைமுறைச் சாத்தியமாகவும் வினைத்திறனாகவும் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு |

| | | | |
|---|---|---|---|
| | | பற்றாக்குறையினால் நி.பி 66 இன் கீழ் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | மீளாய்வாண்டில் 07 செலவின விடயங்களுக்காக ரூபா 421,269,000 தொகையான மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டமையால் அந்நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 56,087,784 ஆன நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அச்சேமிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய நதிஏற்பாட்டில் 12 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையான வீச்சளவினைக் கொண்டிருந்தது. | **Covid 19** தொற்றுநோய் நிலைமை காரணமாக 2020 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் திணைக்களத்தின் செயற்பாடுகள் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்படவில்லை என்பதாலும், ITMIS முறைமையின் பராமரிப்பு செயற்பாடுகளுக்காக தெரிவு செய்யப்பட்ட கம்பனிக்கு மதிப்பிடப்பட்ட தொகையை விட 2020 ஆம் ஆண்டில் பராமரிப்புச் செலவினம் ஒவ்வொரு காலாண்டிலும் 30 சதவீதம் அளவில் குறைவாக இருந்தமையால் மொத்த செலவினமும் குறைவடைந்த காரணத்தினால் ITMIS செயற்திட்டம் வெளிநிறுவன மொன்றுக்கு கொண்டு செல்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் (Roll out) Covid 19 நிலைமையின் கீழ் திட்டத்தை பூர்த்தி செய்ய முடியாமை காரணமாகவும் சந்தை மட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் உபகரணங்கள் சந்தையில் கிடைக்காத காரணத்தால் திட்டமிடப்பட்ட முறையில் கொள்வனவு செய்வதற்கு முடியாமை காரணமாக செலவின விடயங்களில் நிதிஏற்பாடு சேமிப்பு இடம்பெற்றிருந்தது. | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மிகை நிதிஏற்பாடு செய்வதை கட்டுப்படுத்த வேண்டும். |

## 2.3 பொறுப்புக்களுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் ரூபா 18,771,838 ஆன பொறுப்புக்கள் (தீர்வு செய்யப்படாத) மீயொன்று நிரூபணமாவதுடன் இம்மீதி நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொறுப்புக்களாக இருந்ததுடன் அது 2020 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்பட்டுள்ளதுடன் . Cigas நிகழ்ச்சித் திட்டத்திற்கு தரவுகளை உட்படுத்தும் போது அப்பொறுப்புக்கள் விடுபட்டிருந்ததுடன் அதனை சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆதலால் அது 2020 கணக்காண்டில் கணக்குகளுக்கு உரித்தான விடயமொன்றல்ல. | பொறுப்புக்கள் முறைப்படி நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | நி.பி 392(ஆ) (ii) | தனியார் பொதுக் கம்பனியொன்றுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 11,900 பெறுமதியான 02 காசோலைகள் காணாமல் போயிருந்ததாக கம்பனி செய்த வேண்டுகோளின் பிரகாரம் 584926 ஆம் இலக்க காசோலையொன்று மீண்டும் ரூபா 11,900 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் குறித்த 03 காசோலைகளும் 202 யூலை 07 மற்றும் 30 ஆந் திகதிகளில் தீர்வாகியிருந்தமை அவதானிக்கப்பட்டன. | Covid - 19 தொற்று நிலைமை காரணமாக அனைத்து உத்தியோகத்தர்களையும் கடமைக்கு அழைக்க முடியாமல் இருந்ததுடன் பல்வேறு உத்தியோகத்தர்கள் அலுவலக செயற்பாடுகளை தொடர்வதற்காக அன்றாட கடமைகளை செய்தால் விடய அறிவின்மையினால் இவ்வாறான சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | நி.பி 880 | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தரால் பிணை வைப்பொன்று வைக்கப்பட்டிருக்க வில்லை. | பிணை வைப்பினை வைப்பதற்காக உரித்தாகும் சட்டரீதியான பின்னணியை ஆராய்ந்து முறையான ஆலோசணையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவூட்டப்பட்டுள்ளது | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான வழிகாட்டிகளை மேற்கொள்ளல் |
| (இ) | நி.பி 756 மற்றும் 01/2020 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் 11.1 ஆம் பந்தி | அடுத்த ஆண்டின் மார்ச் 15 இற்கு முன்னர் பொருள் மெய்மையாய்விற்குரிய பொது 47 அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பொருட்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பரிந்துரை மற்றும் முன்மொழிவுகள் தொடர்பாக 2021 மே 06 ஆந் திகதி வரையிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை | 2021.03.17 ஆந் திகதி கைதவிர்ப்பு குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ள துடன் Covid – 19 உத்தியோகத்தர்களை சேவைகளுக்கு அவ்வப்போது இடம் பெறுவதால் அந்நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு காரணமாக முடியாதிருந்தது. அந்நடவடிக்கைகளை விரைவில் நிறைவு செய்யமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சம்பளம் செலுத்தும் முறைமையை விரிவுபடுத்தும் நோக்கில் ஈ சம்பள முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருந்த துடன் ஆரம்பமாக இனங்காணப்பட்ட எட்டு திணைங்களங்களிலும் எஞ்சிய ஆறு | e-Payroll சம்பளக் கொடுப்பனவு முறைமை முதலில் இனங் காணப்பட்ட எட்டு திணைங்களங்களின் செயற்பாடுகள் 2020 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை 85 சதவீதம் பூர்த்தி செய்யப் பட்டிருந்ததுடன் எஞ்சிய | செயற்பாடுகளை ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் பூர்த்தி செய்யும் தேவைப்பாடு |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களங்களில் அந்த நோக்கங்களைில் 70 சதவீதம் வரை அடையப் பெற்றிருந்தது. | ஆறு திணைக்களங்களில் 70 சதவீதம் வெற்றி அடையப்பட்டிருந்தது. முறைமையை செயற்படுத்தும் போது இனங்காணப்பட்ட புதிய தேவைப்பாடுகள் மற்றும் சிக்கல்களை தீர்ப்பதற்கு மேலும் காலம் தேவையாக இருந்ததால் நாட்டில் உருவான Covid - 19 நிலைமை காரணமாக முறைமை பயன்படுத்து பவர்களை பங்குபற்றச் செய்வதில் ஏற்பட்ட பலவீனங்கள் காரணமாக Live run ஐயும் செயற்படுத்த முடியாதிருந்தது. | |
| (ஆ) | ஏற்றுமதி / இறக்குமதி செயற்பாட்டு டிஜிடல் மயப்படுத்தும் நோக்கில் செயற்படுத்தப்பட்டிருந்த தனி மென்பொருள் செயற்படுத்துவதற்குரியதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்கள (DAPH) இற்காக முறைமையின் அபிவிருத்தி செயற்பாடுகள் 70 சதவீதம் வரை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்கள (DAPH) இற்காக மென்பொருள் முறைமையின் அபிவிருத்தி செயற்பாடுகள் 70 சதவீதம் வரை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. ஏற்றுமதி இறக்குமதி செயற்பாட்டிற்காக பொதுவாக தொடர்புபடும் சுங்கத்திணைக்களத்தின் முன்னுரிமையின் கூடிய Single Window நிகழ்ச்சித்திட்டத்தை முன்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக திறைசேரி பிரதிச் செயலாளரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. | - மேற்படி - |
| (இ) | அரச உத்தியோகத்தர்களுக்கு தீர்வையற்ற வாகனங்களை இறக்குமதி செய்யும் விண்ணப்பங்களை நிகழ்நிலைக்கு தொடர் புபடுத்தும் முறைமையை அபிவிருத்தி செய்து | வாகனங்களை இறக்குமதி செய்யும் விண்ணப்பங்களை நிகழ்நிலைக்கு தொடர்பு படுத்தும் முறைமையின் ஆரம்ப சந்தர்ப்பத்தில் இனங்காணப்பட்ட தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக TIPD | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | இதுவரை செயற்படுத்தியிருக்கவில்லை. | இடமிருந்து புதிய தேவைப்பாடு எமக்கு வழங்கப்பட்டிருந்துடன அதன் பிரகாரம் முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. | |
| (ஈ) | திணைக்களத்தின் இணையத் தளத்தில் 2020 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கை உள்ளடக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் 2021 மே 10 ஆந் திகதி வரை 2019 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. | குறித்த தகவல்கள் உள்ளடக்கப்பட்டு இணையத்தளம் நாளதுவரையரைக்கப்பட்டு வருகின்றது. | இணையத்தளம் முறையாக நாளதுவரையரைக் கப்பட வேண்டும். |

**4. மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட மட்டத்திலுள்ள பிரதி / உதவி பணிப்பாளர் நாயக பதவி 2019 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிட நிலைமையில் காணப்படுவதுடன் அரச சேவை மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2021 மே 05 ஆந் திகதி வரை இப்பதவி நிரந்தரமாக நிரப்பப்பட்டிருக்கவில்லை. | 2020.12.31 இல் உள்ளவாறு இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பின் II/III தரத்தில் பிரதி / உதவிப் பணிப்பாளர் பதவிகள் 02 வெற்றிடங்களாக காணப்பட்ட போதும் அதில் ஒன்றுக்கு தற்போது உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்று வந்துள்ளார். ஏனைய பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு இடமாற்றம் செய்யுமாறு அறிவித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | சேவை தேவைப்பாடு கருத்திற் கொள்ளப்பட்டு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழயர் எண்ணிக்கையை முறையாக பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மூன்றாம் மட்டத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி 2020 ஒக்தோபர் மாதம் முதல் வெற்றிடமமாக காணப்பட்டது. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைக்கு உரித்தாக இருப்பதால் அவ்வெற்றிடங்களை நிரப்புமாறு அரச சேவை மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |